Private
E-Sevai
Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# தமிழ் மக்கள் குரல்

தினசரி காலை நாளிதழ்

tamilmakkalkurall@gmail.com

RNI No. : TNTAM24840

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வெள்ளி, அக்டோபர் 18, 2024 | இதழ் 188

## அ.தி.மு.க. ஆட்சி பல புயல்களை, மழை வெள்ளத்தை கண்டது இந்த மழைக்கே அரசு அலறுகிறதே? எடப்பாடி பழனிசாமி

### 'வெள்ளை அறிக்கை கேட்டால் விளையாட்டுதனமாக பேசும் உதயநிதி'

சென்னை, 18 அக் 2024: "தமிழகத்தில் மழை மட்டும்தான் பெய்துள்ளது, அதற்கே இந்த அரசு மிகவும் அலறுகிறது, அண்ணா திமுக பல புயல்களை கண்டதுள்ளது. திருப்புகழ் கமிட்டி அறிக்கையின்படி எடுத்த நடவடிக்கைகள் பற்றி வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்" என்று அண்ணா திமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார். "வெள்ளை அறிக்கை கேட்டால் முதிர்ச்சி இல்லாமல் விளையாட்டுத்தனமாக உதயநிதி ஸ்டாலின் பதில் அளிக்கிறார் என்றும் அவர் சாடினார்.

சென்னை ராயப்பேட்டையில் உள்ள தலைமை அலுவலகத்தில் அதிமுகவின் 53-ம் ஆண்டு ஆண்டு விழா நடைபெற்றது. அந்த வளாகத்தில் உள்ள எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா சிலைகளுக்கு அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அவர் கூறியதாவது:

"பொன்விழா கண்ட கட்சி அண்ணா திமுக. இக்கட்சி பல்வேறு சாதனைகளை புரிந்திருக்கிறது.

சென்னை உள்ளிட்ட சில மாவட்டங்களுக்கு வானிலை ஆய்வு மையம் ரெட் அலர்ட் கொடுத்தது. ஆனால், மழை அதிகளவில் பெய்யவில்லை. வெயில்தான் அடிக்கிறது. இன்னும் பல பகுதிகளில் தண்ணீர் வடியாமல் மக்கள் தவிப்பதை பார்க்க முடிகிறது. 20 செ.மீ. மழை பெய்தால் கூட தண்ணீர் தேங்காது என முதல்வரும், அமைச்சர்களும் கூறினர். தற்போது முதல்வர், துணை முதல்வர் மற்றும் அமைச்சர்கள் உட்பட அனைவரும் மழைநீர் எங்கும் தேங்கவில்லை என பொய் கூறிவருகிறார்கள்.

அண்ணா திமுக பல புயல்களை கண்டது, தானே புயல், ஒக்கி புயல், வர்தா புயல், கஜா புயல் என பல புயல்களை கண்டுள்ளது.



அதேவேளையில் புயல் வேகத்தில் மக்களுக்காக பணியாற்றி, அவர்களின் பிரச்சினையை தீர்த்துள்ளது. அண்ணா திமுகவை குறை சொல்வதற்கு யாருக்கும் தகுதி கிடையாது.

தூய்மைப் பணியாளர்களுக்கு டீ வாங்கி கொடுத்தால் எல்லாம் முடிந்து விடுமா? தூய்மை பணியாளர்களின் வாழ்வை கேள்விக்குறியாக்கிய அரசாங்கம் இந்த அரசாங்கம். அதிமுக ஆட்சியில்தான் தூய்மை பணியாளர்களுக்கு மரியாதை கிடைத்தது. மழைக் காலத்திலும், வெள்ளம் ஏற்பட்ட போதிலும் தூய்மை பணியாளர்களுக்கு போதுமான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது. அவர்களுக்கு இழப்பு ஏற்படும்போது உரிய நிவாரணமும் கொடுக்கப்பட்டது.

அண்ணா திமுக ஒன்றுதான்: அதிமுக இரண்டாகிவிட்டது, அதிமுக பிரிந்து கிடக்கிறது என்ற வார்த்தையை கூட இனி உபயோகிக்க வேண்டாம். பிரிந்து சென்றவர்கள் இன்று எத்தனையோ அவதாரங்களை எடுக்கிறார்கள். ஒன்றாக இருப்பதால்தான் இத்தனை பேர் இங்கு நிற்கின்றோம். கட்சியிலிருந்து நீக்கப்பட்டவர்களை இனி மீண்டும் சேர்க்க வாய்ப்பு இல்லை. எங்கள் தரப்பில் இருப்பதுதான் அதிமுக. கட்சிக்கு விரோதமாக செயல்பட்டவர்கள் அனைவரும் நீக்கப்பட்டு விட்டார்கள். நீக்கப்பட்டவர்கள் நீக்கப்பட்டவர்கள்தான்.

அதிமுக ஆட்சியில் தொடங்கப்பட்ட வடிகால் பணிகளை முடிக்காததால் சென்னையில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. எஞ்சிய மழைநீர் வடிகால் பணிகளை திமுக அரசு முழுமையாக செய்திருந்தால் சென்னையில் இப்பிரச்சினை இருந்திருக்காது. அதிமுக பணிகளை திமுக தொடர்ந்திருந்தால் மழைநீர் தேங்கி இருக்காது. திருப்புகழ் கமிட்டி அறிக்கையின்படி எடுத்த நடவடிக்கைகள் பற்றி வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்.

வெள்ளை அறிக்கை கேட்டால் முதிர்ச்சி இல்லாமல் பதில் அளிக்கிறார் உதயநிதி ஸ்டாலின். விளையாட்டு தனமாக பேசுகிறார் அவர். பெரிதாக மழை பெய்யாததால் ஆங்காங்கே தண்ணீர் தேங்கவில்லை, ஒருவேளை தொடர்ந்து மழை பெய்திருந்தால் நம்மால் வெளியேகூட சென்றிருக்க முடியாது. பல்வேறு அமைச்சர்கள் கவனிக்க வேண்டிய துறைகளை துணை முதல்வர் ஒருவரே கவனிக்கிறார். அனுபவம் வாய்ந்த அமைச்சர்களுக்கு பதில் துணை முதல்வர் மட்டுமே வேலை செய்கிறார். நீர்வளத் துறை, பொதுப்பணித் துறை என அனைத்து துறைகளையும் உதயநிதி ஸ்டாலினே கவனிக்கிறார்.

அனுபவம் பெற்ற அமைச்சர்களின் அறிவுரைகளை கேட்காமல், உதயநிதியை முன்னிலைப்படுத்தவே திமுக முயல்கிறது. குடும்பத்தின் நலனை கருத்தில் கொண்டு செயல்படுகிறது. முதல்வர் ஸ்டானின் தொகுதியில் தேங்கியுள்ள நீரே வடியாமல் கிடக்கிறது. அப்படி இருக்கும்பட்சத்தில் சென்னையில் உள்ள நீரை எப்படி இவர்கள் வடிய வைக்கப் போகிறார்கள்". இவ்வாறு எடப்பாடி கூறினார்.

முன்னதாக, உதயநிதி நிருபர்களிடம் பேசும்போது, "எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி மழைநீர் வடிகால் பணிகள் குறித்து வெள்ளை அறிக்கை கோரியிருக்கிறார். சென்னையில் தற்போது மழை நீர் எங்கும் நிற்காமல் உள்ளதே, அதுதான் வெள்ளை அறிக்கை" என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## சென்னையில் 2 நாட்களில் அம்மா உணவகங்கள் மூலம் 1.28 லட்சம் பேருக்கு இலவச உணவு வினியோகம் 304 மருத்துவ முகாம் மூலம் 17,500 பேர் பலன்

சென்னை, 18 அக் 2024: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தபடி பெருமழை காரணமாக நேற்று 16 ந் தேதியும், 17 ந் தேதியான இன்றும் 2 நாட்களிலும் நிவாரண முகாம்களில் 14.60 லட்சம் பேருக்கும் அம்மா உணவகங்கள் மூலம் 1.28 லட்சம் பேருக்கும் உணவு (பணம் இல்லாமல்) வழங்கப்பட்டது. 304 மழைக்கால மருத்துவ முகாம்கள் மூலம் 17,471 பேர் பயன் பெற்றனர் என்று அரசு ஒரு தகவலை வெளியிட்டுள்ளது.

மழைகாரணமாக வேலைக்குச் செல்லாத ஏழைகளுக்கு முதல்வரின் அறிவிப்பு பெரிதும் உதவியாக அமைந்தது. அம்மா உணவகங்களில் நேற்று (16 ந் தேதி) காலையில் இட்லி பொங்கலும், பிறபகலில் பல்வேறு கலவை சாத உணவு வழங்கப்பட்டது.






காலை மாலை இரண்டு வேளையும் 78 ஆயிரத்து 557 பேர் கட்டணமில்லா உணவினைப் பெற்றுப் பயனடைந்தனர். அதேபோல, மாலையில் 29 ஆயிரத்து 316 ஏழைகளுக்கு சப்பாத்தி கட்டணமின்றி வழங்கப்பட்டது.

இந்நிலையில் முதலமைச்சருக்கு மனதார எங்கள் நன்றியைத் தெரிவிக்கிறோம் என்று கட்டணமில்லா உணவு சாப்பிட்ட மக்கள் மகிழ்ச்சியோடு கூறினர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினும், மற்ற அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று நிவாரணப் பொருள்களை வழங்கினார்கள். குறிப்பாக முதலமைச்சர் புளியந்தோப்பு பகுதியில் ஆய்வு மேற்கொண்டு அங்கு பணி மேற்கொண்டிருந்த சென்னை மாநகராட்சி முன்களப் பணியாளர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு ஊக்கமளித்தார்.

உதயநிதி ஸ்டாலின், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள பெரும்பாலான பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று மழைநிவாரணப் பணிகளை துரிதப்படுத்தினார். அங்கு பொதுமக்கள் தெரிவித்த கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றிட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

பெய்த பெருமழையால் சென்னை மாநகரம் 542 பகுதிகளில் மழைநீர் தேங்கத் தொடங்கியது. அந்தப் பகுதிகளில் எல்லாம் ஏற்கனவே தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த மோட்டார் பம்ப்களை பயன்படுத்தி மழைநீர் தேங்க விடாமல் செய்த மாநகராட்சி பணியாளர்களை முதலமைச்சர் பாராட்டினார்.

தாழ்வான பகுதிகளில் குடியிருந்த மக்களை பாதுகாத்திட 300 நிவாரண மையங்கள் மாநகரின் பல்வேறு பகுதிகளிலும் அமைக்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான உணவு, உடை, குடிநீர் ஆகியவற்றை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார். மழையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மொத்தம் 2 நாட்களிலும் 14,84,735 பேருக்கு உணவு விநியோகிக்கப்பட்டது.

சென்னை மாநகரம் முழுவதிலும் 304 மழைக்கால மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, அவற்றில் 17,471 பேருக்கு மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

சென்னையில் உள்ள 22 சுரங்கப்பாதையிலும் மழைநீர் அகற்றப்பட்டு போக்குவரத்து சீர் செய்யப்பட்டது.

திடீரென பெய்த பெருமழை காரணமாக மக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக, முதலமைச்சரும், துணை முதலமைச்சரும், அமைச்சர்களும், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அதிகாரிகள் ஆகியோரும் மக்களுடன் சேர்ந்து மழை நிவாரணப் பணிகளை மேற்கொண்டார்கள்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11, SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349

# டால்மியா பாரத் பவுண்டேசன், தென் இந்திய உற்பத்தியாளர்கள் கூட்டமைப்போடு இணைந்து பெண் தொழில்முனைவோருக்கான மூன்று நாள் தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சியினை வழங்கியது



சென்னை, 18 அக் 2024: கிராமப்புற பெண்களுக்கு தொழில் திறன்களை மேம்படுத்தும் வகையில் டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட்டின் சி எஸ் ஆர் பிரிவான டால்மியா பாரத் பவுண்டேசன் , தென்னிந்திய உற்பத்தியாளர்கள் கூட்டமைப்புடன் (சிபா) இணைந்து டால்மியாபுரத்தில் மூன்று நாள் தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சியை நடத்தியது.

இதில் கல்லக்குடி கோவண்டக்குறிச்சி, புதூர்பாளையம், மேலரசூர் மற்றும் பளிங்காநத்தம் ஆகிய ஐந்து ஊராட்சிகளில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட 25 பெண் தொழில் முனைவோர்கள் கலந்துகொண்டனர். இந்த பயிற்சி தொழிமுனைவோருக்கான திறன்களை மேம்படுத்தவும் அவர்களின் வணிகத் திறனையும் மற்றும் நிலையான வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் உதவுகிறது.

இந்த பயிற்சியில் வணிக வகைகள், தொழில் வாய்ப்புகள், உற்பத்தி செயல்முறைகள், வணிக செலவு கணக்கீடு, சந்தை பகுப்பாய்வு, மற்றும் சந்தைப்படுத்தல் திட்டமிடல் போன்றவற்றைப் பல்வேறு உதாரணங்கள் மூலமும் செயல் விளக்கங்கள் மூலமும் பயனாளிகளுக்கு விளக்கி கூறப்பட்டது. பயிற்சியின் முடிவில் பங்குபெற்ற அனைத்து பயனாளிகளுக்கு பயிற்சியின் மூலம் பெற்ற திறன்களை அங்கீகரிக்கும் விதமாக சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த பயிற்சியை டால்மியா சிமென்ட் - டால்மியாபுரம் ஆலையின் உயர் அதிகாரிகளான திரு. கணபதிராமன், திரு.ரமேஷ் பாபு மற்றும் திரு. கதிரவன் ஆகியோருடன் சிபா இன் இயக்குனர் டாக்டர் பஞ்சாக்ஷராம் மற்றும் சிபா இன் பொருளாளர் திரு. மைக்கேல் ஆகியோர் இணைந்து பயிற்சியை துவக்கி வைத்தனர்.

டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட் - டால்மியாபுரம் நிர்வாக இயக்குனர் திரு. கே. விநாயகமூர்த்தி பேசுகையில், "டால்மியா பாரத் நிறுவனத்தில், பணியாற்றும் கிராமங்களில் நீடித்த நிலையான வளவதார முன்னேற்ற வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுப்பதும், சமூக பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்துவதும் எங்கள் முக்கிய நோய்க்கமாகும். இந்தப் பயிற்சியும் எங்களின் கிராமங்களின் வளர்ச்சிகளை வலியுறுத்துகிறது. பெண் தொழில்முனைவோருக்கு அவர்களின் நல்வாழ்வை மேம்படுத்தவும், நிலையான வணிகங்களை உருவாக்கவும் மற்றும் அவர்களின் குடும்ப வருமானத்தில் பங்களிப்பை வழங்கவும் தேவையான திறன்கள் மற்றும் வளங்களை அவர்களுக்கு வழங்குவதன் மூலம் வளர்ச்சியை உருவாக்குதல் எங்களின் லட்சியம் என்றார்.

தென்னிந்திய உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பின் நிறுவனரும் இயக்குனருமான முனைவர் பஞ்சாக்ஷரம் கூறுகையில் "இந்த முயற்சியில் டால்மியா பாரத் பவுண்டேசனுடன் இணைந்து செயல்படுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், மேலும் இது போன்ற முயற்சிகள் உள்ளூர் பொருளாதார வளர்ச்சிக்கு வலுவான அடித்தளத்தை அமைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்" என்று கூறினார்.

டால்மியா பாரத் பவுண்டேசன் தமிழ்நாட்டின் கிராமப்புற சமூகங்களின் சமூக-பொருளாதார மேம்பாட்டிற்கான செயல்பாடுகளில் முனைப்போடு செயல்பட்டு வருகிறது. பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் மூலம், பெண்கள், விவசாயிகள் மற்றும் இளைஞர்களுக்கான நிலையான வாழ்வாதாரம் மற்றும் திறன் மேம்பாட்டை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. அவற்றில் தொழில் பயிற்சி மற்றும் சமூகம் சார்ந்த திட்டங்கள் அடங்கும். கூடுதலாக, கிராமப்புறங்களில் சமூக உள்கட்டமைப்பை மேம்படுத்துவதில் டால்மியா பாரத் பவுண்டேசன் முக்கிய பங்கு வகிக்கிறது, அதன் செயல்பாட்டு பகுதிகளில் விரிவான சமூக மேம்பாட்டை செயல்படுத்தி வருகிறது.

# இந்தியன் வங்கி வர்த்தக வாகன கடனுதவி தீர்வுகளை வழங்க டாடா மோட்டார்சுடன் எம் ஓ யூ-ல் கையொப்பமிட்டுள்ளது



சென்னை, 18 அக் 2024: இந்தியாவின் முன்னனி பொதுத்துறை வங்கிகளுள் ஒன்றான இந்தியன் வங்கியானது இந்தியாவின் மிகப்பெரும் வர்த்தக வாகன தயாரிப்பாளரான டாடா மோட்டார்சுடன் நாடு முழுதுமுள்ள டாடா மோட்டார்ஸ் வர்த்தக வாகன வாடிக்கையாளர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட டீலர்களுக்கு கவர்ச்சிகரமான நிதிசார் தீர்வுகளை வழங்குவதற்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (எம் ஓ யூ) கையொப்பமிட்டுள்ளது. வங்கியானது போட்டியே அற்றவகையில் வட்டி விகிதங்கள் மற்றும் தொய்வற்ற கிரெடிட் ப்ராசசிங் ஆகியவற்றுடன் கூடிய தனிப்பயனாக்கப்பட்ட நிதிசார் பேக்கேஜுகளை வழங்கும். இந்த ஒப்பந்தம் ஆனது டாடா மோட்டார்சின் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (லிக்விஃபைட் நேச்சுரல் கேஸ் - எல் என் ஜி) மற்றும் மின்சார வாகனங்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த வர்த்தக வாகன வரம்பு வகைகளுக்கும் தனிப்பயனாக்கப்பட்ட நிதிசார் தீர்வுகளை வழங்கும். இந்த அறிவிப்பை பற்றி கூறுகையில் இந்தியன் வங்கி செயல்பாட்டு இயக்குனர் திரு ஆஷுதோஷ் சவுதுரி, "டாடா மோட்டார்சுடன் அவர்களின் டீலர்ஷிப்புகள் மற்றும் சரக்கு வாகன நிறுவனங்களுக்கு தனிப்பயனாக்கப்பட்ட நிதிசார் தீர்வுகளை வழங்கும் பொருட்டு நாங்கள் ஒரு எம் ஓ யூல் கையொப்பமிட்டுள்ளது குறித்து மிக்க உவகை கொள்கிறோம். எங்கள் நிதிசார் பேக்கேஜுகள் வாடிக்கையாளர்கள் மற்றும் டீலர்கள் ஆகியோர் தத்தம் வர்த்தக இலக்குகளை அடையவும் அவர்களின் ஒட்டுமொத்த நிதிசார் செயல்திறனை மேம்படுத்தவும் உதவும். நாங்கள் டாடா மோட்டார்சுடன் அவர்களது வாடிக்கையாளர்கள் தத்தம் வர்த்தக இலக்குகளை எட்ட உதவ தயாராக இருக்கிறோம்," என்று விளக்கினார்.

இந்த முன்னெடுப்பை பற்றி கருத்து கூறுகையில் டாடா மோட்டார்சின் டிரக்குகள் பிரிவின் துணை தலைவர் & பிசினெஸ் ஹெட் திரு ராஜேஷ் கவுல், "இந்தியன் வங்கியுடன் ஒரு எம் ஓ யூ-கையொப்பமிட்டுள்ளது குறித்து மிக்க குதூகலம் அடைகிறோம். இந்த ஒப்பந்தமானது எங்கள் வாடிக்கையாளர்களுக்கு சுலபமாக கடன்சார் தீர்வுகளை வழங்க உதவும். கடனுக்கான அணுகலை சீர்மைபடுத்தியும் தொய்வற்ற கடன்சார் தீர்வுகளை வழங்கியும் நாங்கள் எங்கள் டீலர் நெட்வொர்க்கின் நன்மைக்காக நிதிசார் சுற்றுசூழலமைப்பை வலுவாக்குவதற்கு இலக்கு கொண்டுள்ளோம் மற்றும் டீலர்கள் எங்கள் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு மேம்பட்ட சௌகரியத்தை வழங்கும் அதே வேளையில் தங்கள் வர்த்தகத்தை அதிரித்துக்கொள்ளவும் உதவ முற்படுகிறோம்," என்று விளக்கினார்.

டாடா மோட்டார்ஸ் ஆனது சப்-1-டன் இலிருந்து 55-டன் வரையான சரக்கு வாகனங்கள் மற்றும் 10-இருக்கை இலிருந்து 55-இருக்கை வரையான பொதுமக்கள் போக்குவரத்து தீர்வுகள் என்ற ரீதியில் மிகப்பரந்த வர்த்தக வகைப்பட்டியலை வழங்குகிறது. வலுவாக பொறியியலாக்கப்பட்ட இந்த வர்த்தக வாகனங்களுக்கு நிறுவனத்தின் சம்பூர்ணா சேவா 2.0 முன்னெடுப்பின் மூலம் கிடைக்கப்பெறும் ஒட்டுமொத்த வாகன ஆயுட்கால நிர்வாகத்திற்காக மதிப்பு கூட்டப்பட்ட சேவைகளினால் மேலும் பொருத்தமான பராமரிப்பு சேவை வழங்கப்படுகிறது. டாடா மோட்டார்சின் இணைக்கப்பட்ட வாகன தளமான வாகன நிறுவனங்கள் தங்கள் வாகனங்கள் அதிகளவு தயாராக இருக்கவும் உரிமையாக்கி கொள்ளலின் மொத்த செலவை குறைக்கும் வகையிலும் அவர்களுக்கு உதவிட நிறுவப்பட்ட ஃப்ளீட் எட்ஜ் வழங்கும் சிறந்த சரக்கு வாகன நிர்வாக அமைப்பு மற்றும் இந்தியாவின் மிக அகண்ட சேவை நெட்வொர்க்கின் 24ஜ்7 ஆதரவு ஆகியவற்றின் உதவியால் டாடா மோட்டார்ஸ் ஒட்டுமொத்த போக்குவரத்து தீர்வுகளை பொறுத்தவரை புதிய செந்தரங்களை தொடர்ந்து நிறுவி வருகிறது.

# பங்கு பிரிப்பிற்கான பதிவு தேதியாக நவம்பர் 07-ம் தேதியை நிர்ணயம் செய்திருக்கும் ஹசூர் மல்டி புராஜெக்ட்ஸ் லிமிடெட்

சென்னை, 18 அக் 2024: பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமான (ஈ பி சி) ஒப்பந்த சேவைகள் துறையில் முதன்மை வகிக்கும் ஹசூர் மல்டி புராஜெக்ட்ஸ் லிமிடெட் (எச் எம் பி எல்) நிறுவனத்தின் ஆண்டு பொதுகுழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டவாறு அதன் ஈக்விட்டி பங்கை 1:10 என்ற விகிதத்தில் பிரிப்பதற்கான பதிவு தேதியாக நவம்பர் 07, 2024 நிர்ணயிக்கப்பட்டிருப்பதை இன்று அறிவித்திருக்கிறது. இதற்கு முன்னதாக, ஸ்கொயர் ஃபோர்ட் ஷிப்யார்டு பிரைவேட் லிமிடெட் - ஐ தன் நிறுவனத்துடன் இணைப்பதற்கு கொள்கை ரீதியிலான ஒப்புதலை தனது இயக்குனர்கள் குழு வழங்கியிருப்பதாக எச் எம் பி எல் அறிவித்திருந்தது. இரு நிறுவனங்களின் பலங்களையும், கூட்டிணைவு சக்தியையும் ஒருங்கிணைப்பதன் மூலம் தொடர்புடைய அனைத்து அக்கறைப் பங்காளர்களின் சிறப்பான நலனை உறுதி செய்வதே இந்த இணைப்பு நடவடிக்கையின் நோக்கமாகும். இரு நிறுவனங்களின் பங்குதாரரர்கள், கடன் வழங்கியோர், பங்குச்சந்தை, என் சி எல் டி, செபி மற்றும் பிற சட்டப்பூர்வ அதிகாரி அமைப்புகளின் ஒப்புதலுக்கு இந்த இணைப்பு நடவடிக்கை உட்பட்டதாகும். கர்நாடகா மாநிலத்தின் பீஜப்பூர் ஹுப்ளி பிரிவில் என் எச் 218-ன் 4.40 கி.மீ-லிருந்து 56.00 கி.மீ வரை 2 லேன்களாக சாலையை விரிவாக்கம் செய்வதற்காக முளவாடு எஃப் பி என்ற இடத்தில் சாலையைப் பயன்படுத்தும் வாகனங்களுக்கான பயனாளி கட்டணத்தை வசூலிக்கும் முகமையாக செயல்பட இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்திடமிருந்து ஒரு பணி ஆணையை தனக்கு வழங்கப்பட்டிருப்பதை சமீபத்தில் ஹசூர் மல்டி புராஜெக்ட்ஸ் லிமிடெட் அறிவித்திருந்தது. வழங்கப்பட்டிருக்கும் இச்செயல்திட்டத்தின் மதிப்பு ரூ. 2.59 கோடியாகும்.

பஹாடி கோரேகான்-1473, ஷிர்தோன்- மிமிமி, கோனி- 1374, நவ்டே-1449, சிபி டபிள்யூ டி-1447, தலோஜா-1415/16, தானே- 1453 மற்றும் கனம்வர்நகர்-1180 ஆகிய இடங்களில் பல்வேறு அமைவிடங்களை அகழ்ந்து தோன்றுவதற்காக பி. ஜி. ஷிர்கே கன்ஸ்ட்ரக்ஷன் டெக்னாலஜி பிரைவேட் லிமிடெட்-யிடமிருந்து ஒரு பணியானை கிடைத்திருப்பதையும் இந்நிறுவனம் இதற்கு முன்னதாக தெரிவித்திருந்தது. வழங்கப்பட்டுள்ள இச்செயல்திட்ட பணி ஆணையின் மதிப்பு ரூ. 30 கோடியாகும். இந்தியாவின் வேகமாக வளர்ந்து வரும் உள்கட்டமைப்பு செயற்பிரிவின் முன்னணியில் ஹசூர் மல்டி புராஜெக்ட்ஸ் லிமிடெட் உள்ளது. உயர்தர மற்றும் நம்பகமான பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமான (ஈ பி சி) ஒப்பந்த சேவைகளை வழங்குவதற்கான ஒரு தொழிற்பிரிவை உருவாக்கி வளர்ச்சி காண செய்திருப்பதன் மூலம் இதை அது சாதித்திருக்கிறது. தேசத்தின் கட்டமைப்பு செயல்பாட்டில் அதிகரித்து வரும் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், இத்தொழில்துறையில் ஒரு முக்கிய பங்களிப்பு செய்யும் நிறுவனமாக மிக விரைவாக எச் எம் பி எல் உருவெடுத்துள்ளது.

# சென்னை தொழிற்சாலை தொழிலாளர்களுக்கு சாம்சங் நிறுவனம் கேலக்ஸி டேப் ஏ9 தீபாவளி பரிசாக வழங்கவுள்ளது

சென்னை, 18 அக் 2024: சாம்சங் இந்தியா நிறுவனம் இந்த ஆண்டு தீபாவளியை முன்னிட்டு சென்னை தொழிற்சாலை தொழிலாளர்களுக்கு கேலக்ஸி டேப் ஏ9 வழங்குவதாக வியாழக்கிழமை அறிவித்துள்ளது.

“சாம்சங் இந்தியாவில், நாங்கள் எங்கள் தொழிலாளர்களுக்காக ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளோம். பாராட்டு தெரிவிக்கும் வகையில், சென்னை தொழிற்சாலை ஊழியர்களுக்கு சிறப்பு தீபாவளி பரிசுகளை அறிவித்துள்ளோம். இப்பகுதியில் உள்ள எங்கள் தொழிலாளர்களுக்கு நாங்கள் ஏற்கனவே சிறந்த சம்பளத்தை வழங்குகிறோம். கூடுதலாக, சென்னை தொழிற்சாலை தொழிலாளர்கள் கூடுதல் பண கொடுப்பனவுகள் மற்றும் இலவச ஷட்டில் பேருந்து மற்றும் உணவுக்கு தகுதியுடையவர்கள். அனைத்து ஊழியர்களுக்கும் சிறந்த பணியிடமாக சென்னை தொழிற்சாலையை உருவாக்க வேண்டும் என்பதே எங்கள் எண்ணம்” என்கிறார் சாம்சங் சென்னை தொழிற்சாலையின் பொது மேலாளரும் மனிதவளத் தலைவருமான மேரி புளோரன்ஸ் யாஷினி ஆர்.

சென்னை தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் வருகைக்கான ஊக்கத்தொகை மற்றும் இரவு ஷிப்ட் கொடுப்பனவு மற்றும் செயல்திறன் ஊக்கத்தொகையுடன் தகுதியுடையவர்கள், இது அவர்களின் அடிப்படை சம்பளத்தில் 100% ஆக இருக்கலாம். ஒரு புதிய முயற்சியில், தொழிலாளர்கள் ரூ. 3 லட்சம் வரை வட்டியில்லா கடனையும் பெறுவார்கள். மேலும், தொழிலாளர்களுக்கு திருமணத்திற்கு ஐந்து நாட்கள் விடுமுறையும், மேலும் ஐந்து நாட்கள் மகப்பேறு விடுப்பும் வழங்கப்படும்.

சென்னை தொழிற்சாலையில் பணிபுரியும் முழு நேர பணியாளர்களுக்கும் உடல்நலம் மற்றும் விபத்து காப்பீடு வழங்கப்படும். சென்னை தொழிற்சாலையில் பல வசதிகள் உள்ளன - நன்கு பொருத்தப்பட்ட உடற்பயிற்சி கூடம், பிரார்த்தனை கூடம், பணிச்சூழலியல் மையம், பாதுகாப்பு பயிற்சி மையம், இன்டர்நெட் கஃபே - தொழிலாளர் நலனுக்காக. தொழிலாளர்கள் பல புகார் சேனல்களை அணுகலாம், இதனால் அவர்கள் உதவியை நாடலாம். பணியில் இருக்கும் போது மரணம் ஏற்பட்டால், சென்னை தொழிற்சாலை தொழிலாளர்கள் தங்களின் உடனடி தேவைகளை கவனித்துக்கொள்ள 100,000 ரூபாய் பெறுவார்கள்.

அக்டோபர் 7, 2024 அன்று தொழிலாளர்களின் பிரதிநிதிகளுடன் சாம்சங் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட சில நாட்களுக்குப் பிறகு தீபாவளி பரிசு அறிவிப்பு வந்துள்ளது. இந்த ஒப்பந்தம் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களைத் தணித்து நிறுவனத்தின் போட்டித்தன்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், சாம்சங் சென்னை நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களின் பிரதிநிதிகளுக்கும் இடையே ஊழியர் தொடர்பான நலன்புரி பிரச்சனைகள் குறித்து தொடர்ந்து உரையாடல் நடைபெறும்.

“என் அன்பான சக ஊழியர்களே. இந்த கடினமான நேரம் மறைந்துவிடும். மீண்டும் சாம்சங் சென்னையில் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்குவோம்,” என்று மேரி புளோரன்ஸ் யாஷினி ஆர் கூறினார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# அர்பன் க்ரூசர் ‘பண்டிகைகால லிமிடெட் எடிஷன்’: டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் அறிமுகம்

திருச்சி, 18 அக் 2024: பண்டிகை காலத்தையொட்டி வாடிக்கையாளர்களுக்கு சிறந்த அனுபவம் மற்றும் மகிழ்ச்சி அளிக்கும் விதமாக பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட பிரீமியம் தரத்திலான உதிரி பாகங்களுடன் அர்பன் க்ரூசர் ஹைரைடர் ‘பண்டிகைகால லிமிடெட் எடிஷன்’ மாடல் காரை டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. ஓட்டுனர் அனுபவத்தை மேம்படுத்தும் வகையில் இந்த புதிய மாடல் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட 13 புதிய உதிரி பாகங்களைக் கொண்ட தொகுப்புடன் வெளிவருகிறது. வெளிப்புறத்தைப் பொறுத்தவரை குரோம் மற்றும் அழகான உதிரி பாகங்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் மட் ப்ளாப், டோர் விசர் (எஸ்எஸ் இன்செர்ட்டுடன் கூடிய பிரீமியம்), முன் மற்றும் பின்புற பம்பர் அழகுபடுத்துதல், ஹெட் லேம்ப் அலங்காரம், ஹூட் சின்னம், பாடி கிளாடிங், பெண்டர் அழகுபடுத்துதல், பின்புற கதவை மூடி அழகுபடுத்துதல் மற்றும் கதவு குரோம் கைப்பிடி ஆகியவற்றை கொண்டுள்ளது.




உட்புறத்தில் பருவநிலைக்கு ஏற்ற 3டி ப்ளோர் மேட், கால் வைக்கும் இடங்களில் விளக்கு வசதி மற்றும் டிஜிட்டல் வீடியோ ரெக்கார்டர் உள்ளிட்ட வசதிகளைக் கொண்டுள்ளது.

கடந்த 2022ம் ஆண்டு அறிமுகமானதில் இருந்து, அர்பன் க்ரூசர் ஹைரைடர் அதன் அதிநவீன தொழில்நுட்பம், ஆற்றல்மிக்க செயல்திறன் மற்றும் சிறந்த எரிபொருள் திறன் ஆகியவற்றின் காரணமாக நாடு முழுவதும் உள்ள நுகர்வோரின் இதயங்களில் நீங்காத இடத்தைப் பிடித்துள்ளது. அதன் கம்பீரமான மற்றும் அதிநவீன ஸ்டைலிங், டொயோட்டாவின் புகழ்பெற்ற உலகளாவிய எஸ்யூவி வரிசையுடன் இணைந்து, பி-எஸ்யூவி பிரிவில் மிகவும் விரும்பப்படும் மாடல்களில் ஒன்றாக மாற்றியுள்ளது. தொடர்ந்து அதிகரித்து வரும் வாடிக்கையாளர் தேவை மற்றும் நாடு முழுவதும் உள்ள வாடிக்கையாளர்களின் அமோக வரவேற்புடன், அர்பன் க்ரூசர் ஹைரைடர், செயல்திறன் அல்லது வசதியில் எந்தவித சமரசம் செய்யாமல் வசதியான பயணத்தை விரும்பும் வாடிக்கையாளர்களுக்கு விருப்பமான தேர்வாகத் இது தொடர்ந்து இருந்து வருகிறது.

அர்பன் க்ரூசர் ஹைரைடர் பண்டிகைகால லிமிடெட் எடிஷன், பிரீமியம் ரக உதிரி பாகங்கள் பேக்கேஜுடன் பல்வேறு வசதிகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கிறது. இந்த புதிய மாடல் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட 13 புதிய உதிரி பாகங்களைக் கொண்ட தொகுப்பைக் கொண்டுள்ளது. இந்த பிரத்யேக தொகுப்பு நியோ டிரைவ் மற்றும் ஹைப்ரிட் ஆகிய கார்களின் வி மற்றும் ஜி மாடல்களில் கிடைக்கிறது. இவை வாடிக்கையாளர்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

புதிய அறிமுகம் குறித்து கருத்து தெரிவித்த டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனத்தின் விற்பனை மற்றும் சேவை மற்றும் பயன்படுத்தப்பட்ட கார் வர்த்தகப் பிரிவு துணைத் தலைவர் சபரி மனோகர் கூறுகையில், கடந்த 2022ம் அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து, அர்பன் க்ரூசர் ஹைரைடர் பாதுகாப்பான மற்றும் வசதியான போக்குவரத்து வாகனங்களை வழங்கும் எங்கள் நிறுவனத்தின் உறுதிப்பாட்டின் அடையாளமாக உள்ளது மற்றும் அதிக அளவிலான வாடிக்கையாளர் திருப்தியுடன் மிகவும் பிரபலமாக விளங்கி வருகிறது. வளர்ந்து வரும் தேவை மற்றும் சிறப்பான வரவேற்பு ஆகியவை தொடர்ந்து எங்களை ஊக்கப்படுத்தி வருகின்றன. எங்கள் வாடிக்கையாளர்களின் பல்வேறு தேவைகளைப் புரிந்துகொள்வதன் மூலம், தொடர்ந்து நவீன தொழில்நுட்பத்தில் பல்வேறு புதிய மாடல் கார்களை நாங்கள் அறிமுகம் செய்து வருகிறோம்.

வாடிக்கையாளர்களுக்கு தனிப்பயனாக்கப்பட்ட சிறந்த அனுபவத்தை வழங்கும் வகையில் பல்வேறு சிறப்பு சலுகைகளுடன் பிரீமியம் தரத்திலான உதிரி பாகங்களுடன் எங்களின் அர்பன் க்ரூசர் ஹைரைடர் பண்டிகைகால லிமிடெட் எடிஷனை நாங்கள் அறிமுகம் செய்திருக்கிறோம். இது கம்பீரமான தோற்றத்துடன் சிறந்த எரிபொருள் திறனை வழங்குகிறது. இந்திய வாடிக்கையாளர்களின் தேவையை மனதில் கொண்டு பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட இந்த கார் எஸ்யூவி மாடலாக வெளிவந்திருப்பது என்பது இன்னும் பெரிய மதிப்பை உருவாக்குகிறது. மேலும், இந்த பண்டிகை காலத்தில், அர்பன் க்ரூசர் ஹைரைடர் பண்டிகைகால லிமிடெட் எடிஷன் பல்வேறு சிறப்பு சலுகைகளுடன் வருகிறது, இது எங்கள் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும் என்று தெரிவித்தார்.

இந்த சிறப்பு அறிமுகத்தின் மூலம், இந்தியா முழுவதும் உள்ள டீலர்ஷிப்களில் அக்டோபர் 31 வரை அர்பன் க்ரூசர் ஹைரைடர் பண்டிகைகால லிமிடெட் எடிஷன் காரை வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு ரூ.50,817 மதிப்பிலான சலுகைகள் வழங்கப்பட உள்ளது. இந்த காருக்காக பிரத்யேகமாக தயாரிக்கப்பட்டஅனைத்து உதிரி பாகங்களும் டீலர்ஷிப்களில் சான்றளிக்கப்பட்ட டொயோட்டா தொழில்நுட்ப வல்லுனர்களால் பொருத்தப்படும், இது மிக உயர்ந்த தரம் மற்றும் வாடிக்கையாளர் திருப்தியை உறுதி செய்கிறது. அனைத்து டொயோட்டா டீலர்ஷிப்களிலும் முன்பதிவுகள் துவங்கி உள்ளது. வாடிக்கையாளர்கள் இந்த காரை ஆன்லைனில் https://www.toyotabharat.com/online-booking/ என்ற இணையதளத்தில் முன்பதிவு செய்யலாம் அல்லது அருகிலுள்ள டொயோட்டா டீலர்ஷிப்பை அணுகலாம்.

# எச்டிஎஃப்சி லைஃப் மொத்த சந்தைப் பங்கில் 11.0% எட்டியுள்ளது; 31% வலுவான புதிய வணிக பிரீமியம் (தனிப்பட்ட ஏபிஈ) வளர்ச்சியின் மூலம் புதிய வணிகத்தின் மதிப்பு 17.4% அதிகரித்துள்ளது

சென்னை, 18 அக் 2024: எச்டிஎஃப்சி லைஃப் இன் இயக்குநர்கள் குழு, செப்டம்பர் 30, 2024 அன்று முடிவடைந்த அரையாண்டிற்கான மதிப்பாய்வு செய்யப்பட்ட முழுமையான மற்றும் ஒருங்கிணைந்த நிதி முடிவுகளை அங்கீகரித்து ஏற்றுக்கொண்டது. நிறுவனம் அனைத்து அளவீடுகளிலும் ஆரோக்கியமான செயல்திறனை பதிவுசெய்துள்ளது, நேர்மறையான வேகத்தை பராமரிக்கிறது.

செயல்திறன் சிறப்பம்சங்கள்:

டாப்லைன் வளர்ச்சி : 31% வலுவான புதிய வணிக பிரீமியம் (தனிப்பட்ட ஏபிஈ) வளர்ச்சியை வழங்கியது, விற்கப்பட்ட பாலிசிகளின் எண்ணிக்கையில் 22% அதிகரிப்பு சமச்சீர் தயாரிப்பு கலவையால் ஆதரிக்கப்பட்டுள்ளது.

சந்தைப் பங்கு: தனியார் துறை சந்தைப் பங்கு (தனிப்பட்ட டபிள்யூ அர் பி) 60 பி பி எஸ் அதிகரித்து 16.3% ஆக உள்ளது. ஒட்டுமொத்த சந்தைப் பங்கு 11% என்ற புதிய உச்சத்தைத் தொட்டது.

புதிய வணிகத்தின் மதிப்பு (வி என் பி) 17.4% அதிகரித்து ரூ. 1,656 கோடியாக இருந்தது, இது லாபகரமான வணிகத்தை பதிவுசெய்வதில் முக்கியப் பங்கு வகித்தது.

மேலாண்மையின் கீழுள்ள சொத்துக்கள் (ஏ யூ எம்): செப்டம்பர் 30, 2024 இல் ஏ யூ எம் ரூ.3.25 லட்சம் கோடியாக இருந்தது, இது எச்1 எஃப்ஒய்25 இல் 23% அதிகரித்துள்ளது.

நிலைத்தன்மை: 13வது மற்றும் 61வது மாத நிலைத்தன்மை விகிதங்கள் முறையே 88% மற்றும் 60% ஆக மேம்பட்டுள்ளன, இது முந்தைய ஆண்டை விட முறையே 120 அடிப்படை புள்ளிகள் மற்றும் 730 அடிப்படை புள்ளிகள் அதிகரித்துள்ளது, இது வாடிக்கையாளர்களுடன் ஈடுபடுவதற்கும் தக்கவைத்துக்கொள்வதற்கும் நிறுவனத்தின் திறனை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

உட்பொதிக்கப்பட்ட மதிப்பு (ஈ வி) காலாண்டில் ரூ. 50,000 கோடி மைல்கல்லைத் தாண்டியது, ஈ வி மீதான 16.0% செயல்பாட்டு வருவாயுடன், பாலிசிதாரர்கள் மற்றும் பங்குதாரர்கள் இருவருக்கும் நீடித்த நீண்ட கால மதிப்பு உருவாக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது.

வரிக்குப் பிந்தைய லாபம் (பி ஏ டி) எச்1 எஃப்ஒய்25 இல் ரூ. 911 கோடி எட்டப்பட்டது, இது கடந்த ஆண்டுடன் ஒப்பிஐகயில் 15% நிலையான வளர்ச்சியாகும்.

கடனளிப்பு விகிதம் 181% ஆக இருந்தது, 150% என்ற ஒழுங்குமுறை வரம்புக்கு மேல் சிறப்பாக உள்ளது. அக்டோபர் 9, 2024 அன்று ரூ. 1,000 கோடிக்கு கீழ்ப்படுத்தப்பட்ட கடனை உயர்த்திய பிறகு, கடனளிப்பு 192% ஆக இருந்தது.

எச் டி எஃப் சி பென்ஷன் ஃபண்ட் மேனேஜ்மென்ட் என்பது எச்டிஎஃப்சி லைஃப் இன் முழு உரிமையுடைய துணை நிறுவனம் மற்றும் இந்தியாவின் மிகப்பெரிய தனியார் ஓய்வூதிய நிதி மேலாளர் ஆகும். இது எச்1 எஃப்ஒய்25 இல் நிர்வாகத்தின் கீழ் சொத்துக்களில் ரூ.1 லட்சம் கோடியைத் தாண்டியதன் மூலம் குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியது.

பணியாளர் கவனம்: நாங்கள் உள்ளடக்கியமை மற்றும் பணியாளர் நட்புக் கொள்கைகளுக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ளோம், பி எஃப் எஸ் ஐ துறையில் 2024 ஆம் ஆண்டில் இந்தியாவில் பெண்களுக்கான சிறந்த நிறுவனங்களாகவும், அவ்தார் & செராமவுண்ட் ஆல் உள்ளடக்கப்பட்டதற்கான எடுத்துக்காட்டு (மிகவும் உள்ளடக்கிய நிறுவனங்கள் இந்தியா 2024) விருது வழங்கப்பட்டது.

தலைமை நிர்வாக அதிகாரி அறிக்கை:

எச்டிஎஃப்சி லைஃப் இன் மேலாண்மை இயக்குனர் மற்றும் சி ஈ ஓ விபா பதல்கர் அவர்கள்: "தனியார் துறை மற்றும் ஒட்டுமொத்த தொழில்துறையானது கியூ2 இல் அதன் வலுவான வேகத்தைத் தொடர்ந்தது, எச்1 எஃப்ஒய்25 இல் முறையே 24% மற்றும் 21% வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இந்த காலகட்டத்தில் 28% மற்றும் 2 வருட சி ஏ ஜி ஆர் அடிப்படையில் 19% வளர்ச்சியின் மூலம் நாங்கள் தனியார் துறையை விட சிறப்பாக செயல்பட்டுள்ளோம். பாலிசிகளின் எண்ணிக்கையில் 22% அதிகரிப்பை பதிவு செய்துள்ளோம், இது தனியார் துறை வளர்ச்சியான 13% ஐ விட கணிசமாக முன்னேறியது. அடுக்கு 1, அடுக்கு 2 மற்றும் அடுக்கு 3 புவியியல் முழுவதும் மதச்சார்பற்ற வளர்ச்சி போக்குகளை நாங்கள் அனுபவித்தோம்.

ஒழுங்குமுறைப் பிரிவில், அக்டோபர் 1, 2024 இல் இருந்த திருத்தப்பட்ட விதிமுறைகளுக்கு இணங்க, சுமார் 95% வணிகத்திற்கு பங்களிக்கும் 40 க்கும் மேற்பட்ட சிறந்த தயாரிப்புகளை வெற்றிகரமாக மறுதொடக்கம் செய்துள்ளோம், மேலும் காலாண்டில் பிற தயாரிப்புகளை மீண்டும் தொடங்க திட்டமிட்டுள்ளோம். புதிய தயாரிப்பு விதிமுறைகளுக்கு மாறுவதற்கு மூன்று மாதங்கள் கூடுதல் நேரத்தை அனுமதித்ததற்காக கட்டுப்பாட்டாளருக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

மேலும், எச்டிஎஃப்சி லைஃப் நிலைத்தன்மை மற்றும் பொறுப்பான நிர்வாகத்திற்கான அதன் அர்ப்பணிப்புக்காக தொடர்ந்து அங்கீகரிக்கப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். எச்டிஎஃப்சி லைஃப் இன் எஸ்&பி குளோபல் ஈ எஸ் ஜி மதிப்பெண் கடந்த ஆண்டை விட 20% முன்னேற்றத்தைக் கண்டது, மேலும் நாங்கள் தொடர்ந்து பிராந்திய காப்பீட்டாளர்களிடையே நல்ல மதிப்பீட்டைப் பெற்றுள்ளோம். எங்கள் எம்எஸ்சிஐ ஈஎஸ்ஜி மதிப்பீடும் 'ஏ' ஆக மேம்படுத்தப்பட்டுள்ளது.

நிலையான வளர்ச்சியை உந்துதல் மற்றும் முக்கிய பிரிவுகளில் எங்கள் தலைமையை வலுப்படுத்துவதில் நாங்கள் கவனம் செலுத்துகிறோம். வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதையும், மாறும் சந்தையில் நிலைத்திருப்பதையும் உறுதி செய்ய வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட கண்டுபிடிப்புகளில் தொடர்ந்து முதலீடு செய்வோம். சுறுசுறுப்பு மற்றும் நெகிழ்ச்சியுடன் வளர்ந்து வரும் சந்தை நிலப்பரப்பிற்கு ஏற்றவாறு, எங்கள் பங்குதாரர்களுக்கு நீண்ட கால மதிப்பை வழங்குவதற்கான எங்கள் திறனில் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம்" என்று கூறினார்.

# வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் வடசென்னை - நெல்லூருக்கு இடையே கரையை கடந்தது

சென்னை, 18 அக் 2024: வங்கக்கடலில் நிலவி வந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் வடசென்னை நெல்லூருக்கு அருகே இன்று அதிகாலை 4.30 மணிக்கு கரையைக் கடந்தது.

தென்மேற்கு வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று தென்மேற்கு மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக் கடலில் நிலை கொண்டிருந்தது.

இந்த நிலையில், மேற்கு வடமேற்கு திசையில் வட தமிழ்நாடு தெற்கு ஆந்திர கடற்கரை பகுதிகளில், புதுச்சேரி மற்றும் நெல்லூருக்கு இடையே சென்னைக்கு வடக்கே இன்று அதிகாலை 4.30 மணியளவில் கரையைக் கடந்து.

மேலும், காற்றழுத்த தாழ்வு மண்டலமானது ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுவிழந்து தெற்கு ஆந்திரம் மற்றும் அதனை ஒட்டிய வட தமிழகத்தின் மேல் தற்போது நிலவி வருவதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளதுகாற்றழுத்த தாழ்வு மண்டலம் சென்னைக்கு மிக அருகில் கரையைக் கடக்கும் என்று முதலில் கணிக்கப்பட்டதை தொடர்ந்து, வட தமிழகத்தின் கடலோர மாவட்டங்களுக்கு ரெட் அலர்ட் விடுக்கப்பட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆனால், நேற்று முன் தினம் நள்ளிரவில், தெற்கு ஆந்திரத்தை நோக்கி புயல் சின்னம் நகர்ந்ததால், சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் படிப்படியாக மழை குறையத் தொடங்கியது. இதன் காரணமாக, சென்னை மற்றும் 3 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த ரெட் அலர்ட்டை சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் புதன்கிழமை இரவு வாபஸ் பெற்றது குறிப்பிடத்தக்கது.

சென்னையின் பெரும்பாலான பகுதிகளில் நேற்று மதியத்துக்கு மேல் மழை முற்றிலும் நின்று விட்டது.

# சுப்ரீம் கோர்ட் புதிய தலைமை நீதிபதியாக சஞ்சீவ் கண்ணா பெயர் பரிந்துரை

சென்னை, 18 அக் 2024: சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதியாக கடந்த 2022ம் ஆண்டு டிசம்பரில் டி.ஒய்.சந்திரசூட் பதவியேற்றார். இவரது பதவி காலம் அடுத்த மாதம் 10ம் தேதி நிறைவடைய உள்ளது. இதையடுத்து அடுத்த தலைமை நீதிபதியாக சஞ்சீவ் கண்ணா பெயரை சந்திரசூட் நேற்று பரிந்துரை செய்தார்.

இந்த பரிந்துரையை அரசு ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், சுப்ரீம் கோர்ட்டின் 51வது நீதிபதியாக சஞ்சீவ் கண்ணா பொறுப்பேற்பார்.

கடந்த 14 ஆண்டுகள் பல்வேறு ஐகோர்ட்டுகளில் நீதிபதியாக சஞ்சீவ் கண்ணா பணியாற்றி 2019ம் ஆண்டு சுப்ரீம் கோர்ட்டின் நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

சுப்ரீம் கோர்ட்டின் 51வது தலைமை நீதிபதியாக பொறுப்பேற்று இப்பதவியில் 2025ம் ஆண்டு மே மாதம் வரை இருப்பார்.

கடந்த 1960ம் ஆண்டு டெல்லியில் பிறந்த சஞ்சீவ் கண்ணா, டெல்லி பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்றவர். இவரது தந்தை டெல்லி ஐகோர்ட் நீதிபதியாக 1985-ம் ஆண்டு வரை பதவி வகித்தார். இவரது தாயார் சரோஜ் கண்ணா, இந்தி பேராசிரியராக டெல்லி ஸ்ரீராம் கல்லூரியில் பணியாற்றினார். 1983ம் ஆண்டு டெல்லி பார் கவுன்சிலில் வழக்கறிஞராக பதிவு செய்து கொண்ட சஞ்சீவ் கண்ணா மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் வழக்கறிஞராக இருந்தார். வருமான வரித்துறையின் மூத்த வழக்கறிஞராக நீண்ட காலம் பணியாற்றி உள்ளார். கடந்த 2004-ம் ஆண்டு டெல்லி அரசின் வழக்கறிஞராகவும் (சிவில்) நியமிக்கப்பட்டார். டெல்லி ஐகோர்ட்டில் பல்வேறு கிரிமினல் வழக்குகளிலும் அவர் ஆஜராகியிருக்கிறார். டெல்லி ஐகோர்ட்டின் கூடுதல் நீதிபதியாக கடந்த 2005 ஆம் ஆண்டு சஞ்சீவ் கண்ணா நியமிக்கப்பட்டார். கடந்த 2019ம் ஆண்டு சுப்ரீம் கோர்ட் நீதிபதியாக நியமிக்கப்பட்டார். எந்த ஒரு நீதிமன்றத்திலும் தலைமை நீதிபதியாக பொறுப்பு வகிக்காமல், சுப்ரீம் கோர்ட்டின் தலைமை நீதிபதியாக பதவியேற்க உள்ளார் சஞ்சீவ் கண்ணா. இதற்கு முன்பாக ஒரு சில நீதிபதிகளே இப்படி பொறுப்பை வகித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆரம்பகால கல்வியறிவு மற்றும் வளர்ச்சியை ஊக்குவிக்கின்ற அக்ஷராப்யாசம் நிகழ்வை, 1500 குழந்தைகளுடன் யூரோகிட்ஸ் நிறுவனம் கொண்டாடுகிறது

சென்னை, 18 அக் 2024: நாட்டின் தலைசிறந்த பாலர் பள்ளி நிபுணரான யூரோகிட்ஸ், ஒரு குழந்தையின் கல்விப் பயணத்தின் தொடக்கத்தைக் குறிக்கின்ற ஒரு புனிதமான இந்திய பாரம்பரியமான அக்ஷராப்யாசம் நிகழ்வைக் கொண்டாடியது. குறிப்பாக தென்னிந்தியாவில் கொண்டாடப்படுகிற இந்த பழமையான சடங்காச்சாரமானது, எழுத்துக்கள் மற்றும் கற்றல் உலகினுள் குழந்தைகளின் அறிமுகத்தை அடையாளப்படுத்துகிறது. தென் பிராந்தியத்தில் உள்ள 200 யூரோ கிட்ஸ் மையங்கள் முழுவதிலும் 1500 மாணவர்களை ஈடுபடுத்தும் அக்ஷராப்யாசம் என்ற இந்த மங்களகரமான நிகழ்வில் நடத்தப்பட்ட இந்த கொண்டாட்டம், அதன் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட காணக்கூடிய சிந்தனை பாடத்திட்டமான 'ஹியூரேகா' உடன் ஒருங்கிணைக்கின்ற அதேவேளையில் இந்த பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் நிறுவனத்தின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியது.



யூரோகிட்ஸ் இல் அக்ஷராப்யாசம் என்ற இந்தக் கொண்டாட்டமானது, பாரம்பரிய வகுப்பறை அமைப்பைத் தாண்டி விரிவடையும் வளமையான கல்வி அனுபவங்களை உருவாக்குவதற்கான இந்த நிறுவனத்தின் நோக்கத்தின் ஒரு பிரதிபலிப்பாக இருக்கிறது. பாரம்பரிய பழக்கவழக்கங்களை, ஒரு முன்னோக்கிச் சிந்திக்கும் பாடத்திட்டம் மற்றும் நவீன கற்றல் வழிமுறைகள் ஆகியவற்றுடன் இணைப்பதன் மூலம், குழந்தைகளை கல்வியறிவு உலகிற்கு அறிமுகப்படுத்துவது மட்டுமல்லாமல், முழுமையான வளர்ச்சிக்கான ஒரு பயணத்தைத் தொடங்குவதற்கு அதிகாரம் அளிக்கும் ஒரு சூழலை யூரோகிட்ஸ் உருவாக்குகிறது. இந்த தனித்துவமான அணுகுமுறை, அவர்களின் உணர்வுப்பூர்வ, சமூக மற்றும் அறிவாற்றல் வளர்ச்சியில் சமமாக கவனம் செலுத்துகின்ற அதே வேளையில் ஒவ்வொரு குழந்தையும் கல்வித்திறனை வளர்க்கின்ற ஒரு உறுதியான அடித்தளத்துடன் அவர்களின் கல்விப் பாதையை தொடங்குவதை உறுதிசெய்கிறது.

அக்ஷராப்யாசம் கொண்டாட்டத்தை ஒரு உண்மையிலேயே மறக்க முடியாத அனுபவமாக மாற்றும் வகையில், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களை ஒன்றுதிரட்டி பல்வேறு ஈடுபாடு மற்றும் ஊடாடும் செயல்பாடுகளை யூரோகிட்ஸ் ஏற்பாடு செய்தது. இந்த நிகழ்வில் மரியாதைக்குரிய பண்டிதர் ஒருவர் பூஜை செய்ய அழைக்கப்பட்டார், குழந்தைகள் கல்வி உலகில் அவர்கள் நுழைவதைக் குறிக்கும் வகையில் தங்கள் முதல் எழுத்துக்களை தானியங்களில் அழகாக வடிவமைத்தனர். இந்த பூஜையைத் தொடர்ந்து, ஆசிரியர்கள், இந்த அனுபவத்தை மேலும் செறிவூட்டுகின்ற ஊடாடும் மற்றும் போதனை விளையாட்டில் குழந்தைகளை ஈடுபடுத்தினர். இந்த சிந்தனையுடன் வடிவமைக்கப்பட்ட செயல்பாடுகள் இந்த நிகழ்வை மகிழ்ச்சியாக மாற்றியது மட்டுமல்லாமல், மாணவர்களிடையே கல்வியின் மதிப்பைப் பற்றிய ஒரு ஆழமான புரிதலை மனதில் பதியவைக்கவும், வாழ்நாள் முழுவதும் கற்றல் மீதான ஒரு அன்பை வளர்க்கவும் உதவியது.

லைட்ஹவுஸ் லேர்னிங் ப்ரீ-கே பிரிவு (யூரோகிட்ஸ்) தலைமை நிர்வாக அதிகாரி கே.வி.எஸ் சேஷசாய் இந்த நிகழ்ச்சி பற்றிக் கூறுகையில், "யூரோ கிட்ஸ் இல், ஒரு குழந்தையின் வாழ்க்கையில் கற்றலின் முக்கியத்துவத்தை பிரதிபலிக்கும் மைல்கற்களை நாங்கள் கொண்டாடுகிறோம். அக்ஷராப்யாசம் ஆனது குழந்தைகளை அறிவு உலகிற்கு அறிமுகப்படுத்துவது மட்டுமல்லாமல், நமது வளமான கலாச்சார பாரம்பரியத்துடன் அவர்களை இணைக்க அனுமதிக்கின்ற ஒரு அற்புதமான பாரம்பரியமாகும். எங்கள் அர்ப்பணிப்பு கல்வியாளர்களுக்கு அப்பால் செல்கிறது; இது நாளைய மனதை வளர்ப்பது மற்றும் அவர்களின் எதிர்காலத்திற்கான வலுவான அடித்தளத்தை உருவாக்குவது பற்றியது ஆகும்.'என்றார். இது போன்ற நிகழ்ச்சிகள் வழியாக, குழந்தைகளில் வாழ்நாள் முழுவதும் கற்றலின் மதிப்பு, கலாச்சாரத்திற்கான மரியாதையை சிறுவயதிலிருந்தே புகுத்துவதன் மூலம் யூரோகிட்ஸ் ஆரம்ப குழந்தை பருவ கல்வியின் அடித்தளத்தை வலுப்படுத்த முயல்கிறது. புதிதாகத் தொடங்கப்பட்ட இந்தப் பாடத்திட்டம், ஆரம்பகால குழந்தைப் பருவக் கல்வியில் ஒரு தலைவராக அதன் நிலையை மீண்டும் உறுதிப்படுத்தி, ஆர்வமுள்ள, நன்கு வளர்ந்த மாணவர்களை வடிவமைப்பதில் யூரோகிட்ஸ் நிறுவனத்தின் அர்ப்பணிப்பை முக்கியப்படுத்திக் காட்டுகிறது.

## டிசிசிஎல், வி கே டிஜிட்டல், மற்றும் எஸ் சி வி ஆகியவற்றின் திடீர் தொகுப்பு மாற்றங்களைத் தொடர்ந்து தமிழ்நாட்டின் பார்வையாளர்கள் பாதிப்புக்குள்ளானார்கள்

சென்னை, 18 அக் 2024: ஒரு ஏமாற்றமளிக்கின்ற நிகழ்வுகளின் விளைவாக, முக்கிய ஆபரேட்டர்களான டி சி சி எல், வி கே டிஜிட்டல் மற்றும் எஸ் சி வி ஆகியவற்றின் தவறான புகார்கள் மற்றும் நியாயமற்ற, ஒருதலைப்பட்சமான செயல்களால், தமிழ்நாட்டின் சந்தாதாரர்கள் ஸ்டார் விஜய் மற்றும் ஸ்டார் ஸ்போர்ட்ஸ் 1 தமிழ் உட்பட தங்களுக்குப் பிடித்த ஸ்டார் சேனல்களை அணுக முடியாமல் தவித்து வருகின்றனர். இந்த ஆபரேட்டர்கள், ஸ்டார் விஜய் மற்றும் பிற ஸ்டார் சேனல்களுக்கான விலைகள் அதிகரித்துள்ளதன் விளைவாக வாடிக்கையாளர்களுக்கு எந்தவித முன்னறிவிப்போ அல்லது சந்தாதாரர்கள்/வாடிக்கையாளர்களின் எந்தவித கோரிக்கைகளும் இல்லாமல் இந்த சேனல்களை மொத்தமாக தங்கள் அடிப்படை தொகுப்பிலிருந்து நீக்குவதற்கு காரணமானது என்ற தவறான கருத்துக்களை முன்வைத்தனர். இந்த திடீர் நடவடிக்கை, எண்ணற்ற பார்வையாளர்கள் / சந்தாதாரர்கள், வசீகரிக்கும் விஜய் சேதுபதி தொகுத்து வழங்கும் பிக் பாஸ் தமிழ் சீசன் 8 மற்றும் உற்சாகமான ஐ சி சி மகளிர் டி20 உலகக் கோப்பை உட்பட, அவர்கள் விரும்பும் பொழுதுபோக்கை இழக்கச்செய்தது.

"ஸ்டார் விஜய் மற்றும் ஸ்டார் ஸ்போர்ட்ஸ் 1 தமிழ் ஆகியவற்றின் விலைகள் உயர்த்தப்படவில்லை. இந்த பண்டிகைக் காலத்தில் பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டுகள் முழுவதிலும் முக்கிய உள்ளடக்கத்தின் ஒரு வலுவான வரிசைப்படுத்தலை வழங்குவதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். பல ஆண்டுகளாக, பிக் பாஸ் தமிழ் நிகழ்ச்சியானது, கடந்து செல்கின்ற ஒவ்வொரு சீசன் மூலம் அதன் இணைப்பு வலுவடைகின்றதுடன் தமிழ்நாட்டில் உள்ள எங்கள் பார்வையாளர்களின் இதயங்களில் ஒரு தனி இடத்தை உருவாக்கியுள்ளது. பெண்கள் கிரிக்கெட் போட்டியின் வேகம் அதிகரித்து வரும் நிலையில், ஐ சி சி மகளிர் டி20 உலகக் கோப்பை 2024 கண்டிப்பாக பார்க்க வேண்டிய ஒரு நிகழ்வாகும். எங்கள் பார்வையாளர்களை உயர்தர உள்ளடக்கத்துடன் தொடர்ந்து மகிழ்விக்க நாங்கள் எதிர்நோக்குகிறோம்," என்று டிஸ்னி ஸ்டார் செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறினார்.

ஸ்டார் சேனலின் விலைகள் உயர்த்தப்பட்டுள்ளது என்ற தவறான உண்மைகளை கூறியதன் மூலம் சில எம் எஸ் ஓ-கள் ஒருதலைப்பட்சமாக பாக்கியலட்சுமி, சிறகடிக்க ஆசை, ஆஹா கல்யாணம் போன்ற பிரபலமான நிகழ்ச்சிகளுக்கான சந்தாதாரர்கள் அணுகலை சீர்குலைக்க முயன்றனர். ஆனால் அது அவர்களை விரக்தியாகவும் குழப்பமாகவும் வைத்தது. இந்த திடீர் மாற்றம் நுகர்வோரை ஏமாற்றமடையச் செய்தது மேலும் அவர்களின் பொழுதுபோக்குத் தேவைகளைப் பறித்துள்ளது. இந்த சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட பார்வையாளர்கள், அக்டோபர் 1, 2024க்கு முந்தைய பார்வை அனுபவத்தை உடனடியாகத் திரும்பப்பெற உடனடியாக தங்கள் ஆபரேட்டர்களைத் தொடர்பு கொள்ள வேண்டும். அவர்கள் இன்னும் தங்களுக்குப் பிடித்த சேனல்களுக்கான அணுகலைத் திரும்பப் பெறவில்லை என்றால், அவர்களுக்கும் அவர்களின் பொழுதுபோக்குத் தேர்வுகளுக்கும் மதிப்பளிக்கும் ஒரு மாற்று ஆபரேட்டருக்கு மாறுவதைப் பற்றி அவர்கள் பரிசீலிக்கலாம்.

டிஸ்னி ஸ்டார் நெட்வொர்க், தமிழ்நாட்டிலுள்ள அதன் பார்வையாளர்களுக்கு சிறந்த பொழுதுபோக்கைக் கொண்டுவர உறுதிபூண்டுள்ளது. டி சி சி எல், வி கே ஞிவீரீவீமீணீறீ மற்றும் எஸ் சி வி ஆகியவை 09.10.2024 தேதியிட்ட மாண்புமிகு டி டி எஸ் ஏ டி அறிவுறுத்தல்களுக்கு இணங்க, தங்களால் உருவாக்கப்பட்ட இந்த நிலைமையை விரைவாகச் சரிசெய்வார்கள் என்று இந்த நெட்வொர்க் நம்புகிறது, இதன் மூலம் சந்தாதாரர்கள் தங்களுக்குப் பிடித்த ஸ்டார் சேனல்களை மேற்கொண்டு எந்த தாமதமும் இல்லாமல் மீண்டும் அனுபவிக்க முடியும்.

## முத்தூட் ஃபின்கார்ப் லிமிடெட் XVII ட்ரான்ச் II சீரிஸ் என் சி டிகளை அறிவித்து ரூ. 250 கோடி நிதி திரட்டுகிறது

சென்னை, 18 அக் 2024: 137 ஆண்டு பழமையான முத்தூட் பாப்பச்சன் குழுமத்தின் (முத்தூட் ப்ளூ) முதன்மை நிறுவனமான முத்தூட் ஃபின்கார்ப் லிமிடெட் (எம் எஃப் எல் அல்லது "கம்பெனி") ஆனது XVII ட்ரான்ச் II சீரிஸ் பாதுகாக்கப்பட்ட, மீட்டெடுக்கக்கூடிய, மாற்ற முடியாத கடனீட்டுப் பத்திரங்கள் ஒவ்வொன்றும் ரூ. 1000 முகமதிப்பு (" என் சி டிஎ") கொண்ட, ரூ. 2000 கோடி என்ற வரம்புக்கு உட்பட்டு ரூ.250 கோடியாக திரட்ட திட்டமிட்டுள்ளது. இது நிறுவனத்தின் இரண்டாம் தவணை வெளியீடு ஆகும். XVII ட்ரான்ச் II வெளியீடு ரூ. 75 கோடி ("அடிப்படை வெளியீட்டு அளவு") ஆனது ரூ. 175 கோடி பச்சை ஷூ விருப்பத்துடன் ரூ. 250 கோடி ("துணை II வெளியீட்டு வரம்பு") ("துணை II வெளியீடு") நிதி வரை திரட்ட முடிவு. XVII தவணை II வெளியீடு அக்டோபர் 11, 2024 முதல் பொதுமக்களுக்குத் திறக்கப்பட்டு, அக்டோபர் 24, 2024 அன்று முடிவடைகிறது,



இது எங்கள் இயக்குநர்கள் குழு அல்லது நிறுவனத்தின் பங்கு ஒதுக்கீட்டுக் குழுவால் அங்கீகரிக்கப்படலாம் மற்றும் தொடர்புடையது ஒப்புதல்கள் மேற்கொள்ளப்படலாம். இது, பத்திரங்களின் ஒழுங்குமுறை 33ஏ இன் படி மற்றும் இந்திய பரிவர்த்தனை வாரியம் (மாற்ற முடியாத பத்திரங்களின் வெளியீடு மற்றும் பட்டியல்) விதிமுறைகள், 2021, திருத்தப்பட்ட (செபி என் சி எஸ் விதிமுறைகள்) விதிகளுக்கு உட்பட்டது. XVII ட்ரான்ச் II வெளியீட்டின் கீழ் என் சி டி கள் 24, 36, 60, 72 மற்றும் 92 மாதங்களுக்கான முதிர்வு / கால அம்சங்களுடன் வழங்கப்படுகின்றன, மாதாந்திர, வருடாந்திர மற்றும் பல்வேறு விருப்பங்களில் - I, II, III, IV, V, VI, VII, VIII, IX, X, XI, XII மற்றும் XIII அதிலிருந்து வாடிக்கையாளர்கள் வசதியாகத் தேர்வு செய்யலாம். அனைத்து வகை முதலீட்டாளர்களிலும் என் சி டி வைத்திருப்பவர்களுக்கு பயனுள்ள மகசூல் (ஆண்டுக்கு) 9.00% முதல் 10.10% வரை இருக்கும். XVII ட்ரான்ச் II இன் கீழ் வழங்கப்பட்ட என் சி டிகள் க்ரிசில் ரேட்டிங்ஸ் லிமிடெட் மூலம் க்ரிசில் ஏ ஏ-/ஸ்டேபிள் (கிரிசில் டபுள் ஏ மைனஸ் மதிப்பீட்டில் நிலையான கண்ணோட்டத்துடன் உச்சரிக்கப்படுகிறது) என மதிப்பிடப்பட்டுள்ளது மற்றும் பி எஸ் ஈ இன் கடன் சந்தைப் பிரிவில் பட்டியலிட முன்மொழியப்பட்டுள்ளது. ட்ரான்ச் II வெளியீட்டின் மூலம் திரட்டப்படும் நிதியானது, கடன் வழங்குதல், நிதியளித்தல் மற்றும் வட்டியைத் திருப்பிச் செலுத்துதல்/முன்கூட்டிச் செலுத்துதல் மற்றும் எங்கள் நிறுவனத்தின் தற்போதைய கடன்களின் அசல் மற்றும் பொது நிறுவன நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும்.

"எங்கள் மதிப்புமிக்க முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பான முதலீட்டு வாய்ப்புகளை வழங்கும் என் சி டிகளின் அடுத்த சீரிஸை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். முதலீட்டாளர்கள், நாடு முழுவதும் உள்ள முத்தூட் ஃபின்கார்ப் நிறுவனத்தின் 3,700+ கிளைகள் மூலம் வசதியாக முதலீடு செய்யலாம் அல்லது எங்களது மொபைல் செயலியான முத்தூட் ஃபின்கார்ப் ஒன் மூலம் தங்கள் வீட்டில் இருந்தபடியே ரூ.5 லட்சம் வரை முதலீடு செய்யலாம். " என்று முத்தூட் ஃபின்கார்ப் லிமிடெட் தலைமை நிர்வாக அதிகாரி ஷாஜி வர்கீஸ் கூறினார்.

## எம் எஸ் எம் ஈகளுக்கு டர்போ கடனை அறிமுகப்படுத்திய சி எஸ் பி வங்கி ; டிஜிட்டல் ஸ்கோர்கார்டு அடிப்படையில் எளிமைப்படுத்தப்பட்ட கடன் வசதி

சென்னை, 18 அக் 2024: குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் (எம் எஸ் எம் ஈ) வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக தனியார் துறை நிறுவனமான சி எஸ் பி வங்கி ஆனது எஸ் எம் ஈ டர்போ கடனை அறிமுகப்படுத்தியுள்ளது. மிக எளிமையாம கடன் -தீர்வு தயாரிப்பாகும். தவிர, சி எஸ் பி வங்கி ஆனது பல்வேறு துறைகளில் உள்ள எம் எஸ் எம் ஈ களுக்கு விரைவான, தொந்தரவு இல்லாத கடன் வாய்ப்புகளை வழங்குகிறது. இதமூலம், செயல்முறையை சீராக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. எஸ் எம் ஈ டர்போ கடனின் சில முக்கிய அம்சங்கள்: 5 கோடி வரை கடன், ஓ டி, டி எல் மற்றும் வர்த்தக வசதிகள் வழங்குதல், உடனடி கொள்கைசார்ந்த கடன் அனுமதி



எளிமைப்படுத்தப்பட்ட ஸ்கோர் கார்டு மூலம் கடன் வசதி சிறு வணிகங்களுக்கான புதிய கடன் அமம் குறித்து எஸ் எம் ஈ வணிகத்தின் குழுமத் தலைவர் திரு. ஷியாம் மணி பேசுகையில், "பல சிறப்புகளுடன் கூட தயாரிப்பு ஆனது எம் எஸ் எம் ஈகள் தங்கள் முழுத் திறனை அடையும் வகையில், விரைவான, எளிதான மற்றும் வெளிப்படையான கடன் தீர்வுகளை வழங்குவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. டர்போ லோன் தயாரிப்பு என்பது சந்தையில் தனித்துவமான, எளிமைப்படுத்தப்பட்ட கடன் மதிப்பீட்டின் அடிப்படையில், பாலிசிக்குட்பட்ட உடனடி அனுமதியை வழங்குவதன் மூலம், எஸ் எம் ஈகள் கடனை அணுகும் வழியை எளிதாக்குகிறது. கடன் வழங்கும் செயல்முறையின் பாரம்பரிய இடையூறுகளை நீக்குவதன் மூலம், சிறு வணிகங்களை விரைவான வளர்ச்சியை அடைவதோடு மட்டுமல்லாமல் பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் பங்களிக்கிறோம். பரந்த நிபுணத்துவம் கொண்ட தொழில்துறை நிபுணர்களுடன் இணைந்து ஸ்கோர்கார்டு உருவாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது" என்றார். இந்த தயாரிப்பு சி எஸ் பி வங்கியின் ஒரு பகுதியாகும், அதே நேரத்தில் எம் எஸ் எம் ஈகள் இன்றைய மாறும் வணிகச் சூழலில் செழிக்க இது உதவும். அதே நேரத்தில் வங்கியின் நிலைத்தன்மை, கட்டமைப்பு மற்றும் 2030 இலக்கு ஆகியவற்றுடன் இந்த திட்டம் ஒத்துப்போகிறது.